# MERCY AND JUSTICE IN THE CHURCH

Fr. Steven Scherrer, MM, ThD

Homily of the 23rd Sunday of the Year, September 4, 2011

Ezek. 33:7-9; Ps. 94; Rom. 13:8-10; Matt. 18:15-20

## திருச்சபையில் இரக்கமும் நீதியும

ஆண்டின் பொதுக்காலம் 23 ஆம் ஞாயிறு

எசே. 33.7-9, திருப்பாடல் 94, உரோமை 13.8-10, மத்தேயு 18.15-20

“உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால் நீங்களும் அவரும் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக்காட்டுங்கள். அவர் உங்களுக்குச் செவிசாய்த்தால் நல்லது; உங்கள் உறவு தொடரும். இல்லையென்றால் ‘இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுடைய வாக்குமூலத்தால் அனைத்தும் உறுதி செய்யப்படும்’ என்னும் மறைநூல் மொழிக்கு ஏற்ப உங்களோடு ஒன்றிரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு போங்கள். அவர்களுக்கும் செவிசாய்க்காவிடில் திருச்சபையிடம் கூறுங்கள். திருச்சபைக்கும் செவிசாய்க்காவிடில் அவர் உங்களுக்கு வேற்று இனத்தவர் போலவும் வரிதண்டுபவர் போலவும் இருக்கட்டும்.” (மத். 18.15-17)

நம் கடவுள் இரக்கமுள்ளவர். தன்னுடைய சிறியோருள் எவரையும் அவர் இழக்கவிரும்பவில்லை (மத். 18.6). தன் மந்தையில் உள்ள ஒரு ஆடையும் அவர் இழக்கவிரும்பவில்லை எந்தளவுக்னென்றால் அவர் தொண்ணுற்றொன்பது ஆடையும் விட்டுவிட்டு இழந்த ஒரு ஆட்டைத் தேடிச்சசென்றார் (மத். 18.12). அவர் நம் பாவத்தினால் சினம் கொண்டிருந்தாலும் (உரோ. 1.18) தன்னுடைய ஒரே மகனை அனுப்பி அந்த பாவங்களுக்கு பரிகாரமாக சிலுவையில் மரிக்கச் செய்தார் (உரோ. 8.32). நாம் அவர் மீது நம்பிக்கைகொண்டு அவர் மரணத்தால் வந்த பலனை குறிப்பாக பாவசங்கீர்தனம் என்கிற திருவருட்சாதனம் வழியாக வேண்டினோம் என்றால் எந்த நோக்கத்திற்காக அவர் மரித்தாரை அதை நாம் பெறமுடியும் (மத். 18.18; யோவான் 20.23). நற்கருணையையும் நமக்கு கொடுத்து, அதனால் நம் உள்ளத்தை அவர் ஒளியாலும் அன்பாலும் நிரப்பி நம்முடன் இருக்கிறார்.

இவ்வாறு அவர் அவரோடு ஒப்புரவுறவாகி, நம் உள்ளத்தில் அவரது அமைதியுடனும், அவரது சாயலுக்கு மாறி (2 கொரி. 3.18; உரோ. 8.29) நம்மையே மகிழ்ச்சியுள்ளாக்கி நாம் வாழ அவர் விரும்புகிறார். நமக்காக கிறிஸ்து சிலுவையில் மரித்து நமது பாவங்களை மன்னித்தார் என்பதை அறிந்து நாம் கடவுளுடன் நட்புடன் அவருடைய அமைதி நம் உள்ளத்தில் கொண்டு வாழ்வது ஒரு மகிழ்ச்சியான காரியம். நாம் இந்த நிலையில் எப்போதும் இருக்க விரும்புகிறோம் எனவேதான் பாவம் நம்மை இந்த நிலையிலிருந்து நம்மை விழதாட்டாமல் இருக்க முயற்சி எடுக்கிறோம். எல்லாவற்றிலும் கடவுளுக்கு கீழ்படிந்து நமது பாவங்களை அறிக்கை செய்து எதிர்காலத்தில் கடவுளின் சினத்திற்கு உள்ளாகாமல் இருக்க விரும்புகிறோம்.

கடவுள் நம்மை இரக்கமுடன் நடத்துவதுபோல நாமும் மற்றவர்களிடம் இரக்கமுடன் நடந்துகொள்ளவேண்டும். யாராவது பாவம் செய்தாலோ அல்லது உண்மையைவிட்டு தவறி சென்றாலோ நாம் அவர்கள் நல்வழிக்கு திரும்ப உதவிசெய்ய வேண்டும் மேலும் அவர்களை

சகோதரர்கள் போல நடத்த வேண்டும். “என் சகோதர சகோதரிகளே, உங்களுள் ஒருவர் உண்மையை விட்டு நெறிதவறி அலையும்போது, வேறொருவர் அவரை மனந்திரும்பச் செய்தால், தவறான நெறியிலிருந்து மனந்திரும்புகிறவர் அவரை அழிவிலிருந்து மீட்பார் என்பதையும் திரளான பாவங்களைப் போக்குவார் என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்.” (யாக். 5.19-20). பாவிகளையும் வழிதவறிபோனவர்களையும் திரும்ப நல்வழிக்கு கொண்டுவர கிறிஸ்து எவ்வாறு சிலுவையில் நமது பாவங்களுக்கா மறித்தாரோ அதுபோல கடுமையாக உழைக்கவேண்டும். “சகோதர சகோதரிகளே, ஒருவர் ஏதேனும் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டால் தூய ஆவியைப் பெற்றிருக்கும் நீங்கள் கனிந்த உள்ளத்தோடு அவரைத் திருத்துங்கள்; அவரைப் போல் நீங்கள் சோதனைக்கு உள்ளாகாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.” (கலா. 6.1) வழிதவறிபோனவர்களை சகோதரர்களாகவே நாம் நடத்தவேண்டும் (யாக். 5.19-20) ஏனென்றால் இப்படித்தான் கடவுள் நம்மை நடத்துகின்றார்.

தீயோரை அவர்களுடைய தீய வழியிலிருந்து திரும்பி வர எச்சரிக்கை கொடுக்க அவர்களுடைய காவலாளியாக என்னை ஏற்படுத்தியுள்ளார் என்று எசேக்கியல் இன்றைய முதல் வாசகத்தில் கூறுகிறார் (எசே. 33.7-9). நல்வழிக்கு அவர்கள் திரும்பாவிட்டால் அவர்கள் மடிவார்கள் மற்றும் காவலாளி அவர்களை எச்சரிக்கவில்லை என்றால் பழி அவர்மீது விடும் என்று கடவுள் கூறுகிறார். இவ்வாறு காவலாளி அவர்ளுடைய சாவுக்கு பொறுப்பாகிறான்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம் சகோதரர்களுக்கு காவலாளிகள். கடவுள் நமக்கு இந்த பொறுப்பைக் கொடுத்துள்ளார். வழிதவறி போகிறவர்களை எச்சரிக்க நமக்கு கடமை உள்ளது. நாம் அவர்களை எச்சரிக்கவில்லை என்றால் அவர்கள் மடிவார்கள், அவர்களுடைய இரத்தம் நமது கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒருவரை எச்சரித்தும் அவர் மனந்திரும்பவில்லை என்றால் அவர் மடிவார் அதற்கு நாம் பொறுப்பு இல்லை. “ தீயோரிடம் நான், ‘ஓ தீயோரே! நீங்கள் உறுதியாகச் சாவீர்கள்’ என்று சொல்ல, அத்தீயோர் தம் வழியிலிருந்து திரும்பும்படி நீ அவர்களை எச்சரிக்காவிடில், அத்தீயோர் தம்குற்றத்திலேயே சாவர்: ஆனால், அவர்களது இரத்தப்பழியை உன் மேலேயே சுமத்துவேன்.” (எசே. 33.8)

“உண்மையை விட்டு நெறிதவறி அலையும்” ஒருவரை எப்படி திருத்தவேண்டும் என்று இன்றை நற்செய்தி நமக்கு எடுத்துக்காட்டுகிறது. தனியாகவும், ஒன்று அல்லது இரண்டு சாட்சிகளோடும், இறுதியில் திருச்சபை முன்பாகவும் என்று அவர்களை மூன்று முறை எச்சரிக்கவேண்டும் என்று அது கூறுகிறது. மூன்றாவது எச்சரிக்கைக்கும் அவர் செவிமடுக்வில்லை என்றால் அவர் சமூகத்தைவிட்டு வெளியேற்றப்படவேண்டும் - “திருச்சபைக்கும் செவிசாய்க்காவிடில் அவர் உங்களுக்கு வேற்று இனத்தவர் போலவும் வரிதண்டுபவர் போலவும் இருக்கட்டும்.”(மத். 18.17) திருச்சபையும் இவ்வாறு மூன்று முறை எச்சரித்த பின்பும் மனந்திரும்பவில்லை என்றால் தன்னுடைய நிலையை உறுதிபடுத்திக்கொண்டு அவர்களை வெளியேற்றவேண்டும். “ஒரே நாளில் அவர் ஏழு முறை உங்களுக்கு எதிராகப் பாவம் செய்து ஏழு முறையும் உங்களிடம் திரும்பிவந்து ‘நான் மனம் மாறிவிட்டேன்’ என்று சொல்வாரானால் அவரை மன்னித்து விடுங்கள்.” (லூக். 17.4) ஆனால் பலமுறை எச்சரித்தும் ஒருவர் மனந்திரும்பவில்லையென்றால் அவரை வெளியேற்ற வேண்டும் இவ்வாறுதான் திருச்சபை தன்னேயே பாதுகாக்க முடியும். தூய பவுல் இவ்வாறு கூறுகிறார்: “சபையில் பிளவு ஏற்படக் காரணமாயிருப்போருக்கு ஒருமுறை, தேவையானால் இன்னொருமுறை அறிவு புகட்டிவிட்டுப் பின் விட்டுவிடு. இப்படிப்பட்டவர் நெறிதவறியோர் என்பதும் தங்களுக்கே தண்டனைத் தீர்ப்பளித்துக்கொண்ட பாவிகள் என்பதும் உனக்குத் தெரிந்ததே.” (தீத்து 3.10-11)

திருச்சபையின் கோட்பாடுகளுக்கு எதிராக செயல்பட்டு இந்த கருத்துக்களைப் பரப்ப தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துபவர்களை நாம் இவ்வாறுதான் நடத்தவேண்டும். அவர்களுடைய தவறை உணர்ந்து அவர் மீண்டும் நாம் வாழும் சமூகத்தில் ஒன்றித்து வாழ நாம் முயற்சி எடுக்கவேண்டும். அவர் தொடர்ந்து மறுத்துவந்தால் அவரை நாம் வெளியேற்றவேண்டும்.